ශ්‍රී ලංකා මහ බැංකුව
இலங்கை மத்திய வங்கி
CENTRAL BANK OF SRI LANKA

தொடர்பூட்டல் திணைக்களம்
30, ஜனாதிபதி மாவத்தை, கொழும்பு 01, இலங்கை.
தொலைபேசி: 2477424, 2477423, 2477311
தொலைநகல்: 2346257, 2477739
மின்னஞ்சல்: dcommunications@cbsl.lk, communications@cbsl.lk
வெப்தளம்: www.cbsl.gov.lk

# பத்திரிகை வெளியீடு

**வெளியிடுபவர்** புள்ளிவிபரத் திணைக்களம்

**திகதி** 29.05.2015

## 2015 மேயில் பணவீக்கம்

தொகைமதிப்பு மற்றும் புள்ளிவிபரத் திணைக்களத்தினால் கணிக்கப்பட்டவாறான கொழும்பு நுகர்வோர் விலைச்சுட்டெண்ணில் ஏற்பட்ட மாற்றங்களின் மூலம் அளவிடப்பட்டவாறான பணவீக்கம் (2006/07 = 100) 2015 ஏப்பிறலில் 0.1 சதவீதத்திலிருந்து 2015 மேயில் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 0.2 சதவீதத்திற்கு சிறிதளவால் அதிகரித்தது. ஆண்டுச் சராசரிப் பணவீக்கமும் 2015 ஏப்பிறலில் 2.1 சதவீதத்திலிருந்து 2015 மேயில 1.9 சதவீதத்திற்கு வீழ்ச்சியடைந்தது.



கொ.நு.விலைச் சுட்டெண் 2015 ஏப்பிறலிலிருந்து 2015 மேயில் 0.7 சதவீதத்தினால் அதிகரித்தது. இது பிரதானமாக உணவு விலைகளின் அதிகரிப்பினால் ஏற்பட்டது. 2015 மே காலப்பகுதியில் அநேக வகைக் காய்கறிகள், உடன்மீன்கள் மற்றும் கருவாடுகள், பெரிய வெங்காயம், எலுமிச்சம்பழம், மற்றும் தேங்காய் என்பனவற்றின் விலைகள் அதிகரித்தன. இருப்பினும்கூட, அரிசி, சீனி, மாசிக்கருவாடு மற்றும் சிலவகை பழவர்க்கங்கள் என்பனவற்றின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் சிறிதளவு வீழ்ச்சிகளைப் பதிவு செய்தன.

உணவல்லா வகைக்குள், பல்வகைப் பொருட்கள் மற்றும் பணிகள் மற்றும் பொழுதுபோக்கு மற்றும் கலாச்சாரம் ஆகிய துணை வகைகளின் விலைகள் அதிகரித்துக் காணப்பட்ட வேளையில் ஆடைகள் மற்றும் காலணி, வீடமைப்பு, நீர், மின்வலு, வாயு மற்றும் ஏனைய எரிபொருட்கள்; தளபாடங்கள், வீட்டுச் சாதனங்கள் மற்றும் வழமையான வீட்டு உபயோகப் பொருட்கள்; சுகாதாரம்; போக்குவரத்து; கல்வி மற்றும் தொலைத்தொடர்பூட்டல் ஆகிய ஏனைய துணை வகைகளின் விலைகள் இம்மாத காலப்பகுதியில் மாற்றமின்றிக் காணப்பட்டன.

பொருளாதாரத்தின் முக்கிய பணவீக்கத்தினைப் பிரதிபலிக்கின்ற மையப் பணவீக்கம் ஆண்டிற்கு ஆண்டு அடிப்படையில் 2015 ஏப்றலில் 2.4 சதவீதத்திலிருந்து 2015 மேயில் 2.6 சதவீதத்திற்குச் சிறிதளவால் அதிகரித்தது. ஆண்டுச் சராசரி மையப் பணவீக்கம் 2015 ஏப்பிறலுடன் ஒப்பிடுகையில் 2015 மேயில் 2.9 சதவீதத்தில் மாறாது காணப்பட்டது.